IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 56/2024

Deposition of Witness : PW1

Name : முனிகிருஷ்ணன் (வயது – 54)

Father's Name /W/o : த/பெ கிருஷ்ணன்

Religion : இந்து

Calling : –

Address : நெடுமங்கலம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 04.02.2026.

## முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் எனக்கு தெரியும்.

கிஷ்டப்ப உடையார் பெயரில் உள்ள நில ஒப்படைப்பு உத்தரவு அசல் வா.சா.ஆ – 1 ஆகவும், 22.04.2022 தேதியிட்ட முனிரத்தினம்மாளின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ – 2 ஆகவும், 22.06.1999 தேதியிட்ட முனிரத்தினம்மாளின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ – 3 ஆகவும், 12.10.1987 தேதியிட்ட கிஷ்டப்ப உடையாரின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ – 4 ஆகவும், வாதியின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ – 5 ஆகவும், சர்வே எண்.614/3 இன் நிலமதிப்பு சான்றிதழ் வா.சா.ஆ – 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.